Australian Government
Services Australia

# COVID-19 Disaster Payment -ஐப் பற்றிய தகவல்கள்

மாநில அல்லது எல்லைப்பகுதி அரசின் COVID-19 பொது சுகாதார உத்தரவு ஒன்றின் காரணமாக வேலையையும் வருமானத்தையும் இழந்த, தகுதி பெறும் நபர்களுக்கு அளிக்கப்படும் ஒரு ஒட்டுமொத்தக் கொடுப்பனவாகும் இது. முழு-அடைப்பு மற்றும் நோய்தொற்று அதிகமாக உள்ள பகுதிக்கான கட்டுப்பாடுகள் அல்லது நடமாட்டக் கட்டுப்பாடுகள் ஆகியன சம்பந்தப்பட்டதாக இது இருக்கலாம்.

COVID-19 Disaster Payment -இற்கு வரி-விதிப்பு கிடையாது.

பின் வரும் அனைத்துப் பொதுவான தகுதித்தேவைகளையும், உங்களுடைய சூழ்நிலை குறித்த விதிமுறைகளையும் நீங்கள் பூர்த்தி செய்தால், COVID-19 Disaster Payment ஒன்றிற்கு நீங்கள் தகுதி பெற இயலுமாகலாம். பின் வருவன பொதுவான தகுதியைப் பெறுவதற்கான விதிமுறைகளாகும்:

- நீங்கள் 17 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர் என்றால்
- உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் ஏற்பட்டுள்ள முழு-அடைப்பு ஒன்றின் காரணமாகக் குறைந்த பட்சமாக 8 மணித்தியாலங்களுக்கான வேலை நேரத்தையும் அல்லது முழு நாள் வேலையையும், வருமானத்தையும் நீங்கள் இழந்திருந்தால், மற்றும் சம்பளத்துடன் கூடிய பெருந்தொற்று சம்பந்தப்பட்ட விடுப்பிற்கான தகுந்த உரிமங்கள் எதுவும் உங்களுக்கு இல்லை என்றால்
- அதே காலப்-பகுதிக்கான Pandemic Leave Disaster Payment, அல்லது ‘மாநில அல்லது எல்லைப்பகுதி அரசின் சிறு வர்த்தகக் கொடுப்பனவு’, Dad and Partner Pay, Parental Leave Payment அல்லது ‘மாநில அல்லது எல்லைப்பகுதி அடிப்படையிலான பெருந்தொற்றுக் கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவராவிட்டால்
- கட்டுப்படுத்தப்பட்ட நடமாட்ட உத்தரவு ஒன்றிற்கு உட்பட்ட COVID-19 தொற்று அதிகம் உள்ள பகுதி என்று பொதுநல அரசினால் அறிவிக்கப்பட்ட பகுதி ஒன்றில் நீங்கள் வசித்திருந்தால், வேலை செய்திருந்தால் அல்லது அங்கு சென்றிருந்தால்
- உங்களுடைய வழமையான வருமானத்தினை நீங்கள் பெற்றுக்கொண்டிருக்காவிட்டால், மற்றும் உங்களுடைய முதலாளி உங்கள் சார்பாக Retaining Domestic Airline Capability கொடுப்பனவுகளைப் பெற்றுவராவிட்டால்.

பின் வரும் இரண்டு தருணங்களும் உங்களுக்குப் பொருந்தினால், COVID-19 தொற்று அதிகம் உள்ள பகுதி என்று பொதுநல அரசினால் அறிவிக்கப்பட்ட பகுதி ஒன்றில் வசித்திருக்க அல்லது வேலை செய்திருக்கவேண்டும் என்ற தேவைப்பாட்டை நீங்கள் பூர்த்தி செய்வீர்கள்:

- முழு-அடைப்பு நடைமுறைப்படுத்தப்படாத பகுதி ஒன்றில் நீங்கள் வசித்தால் அல்லது அங்கு வேலை செய்தால்

- முழு-அடைப்பு நடைமுறையிலுள்ள பகுதிக்குள் உங்களால் செல்ல, அல்லது அங்கிருந்து வெளியே வர இயலாத காரணத்தினால் உங்களால் வேலை செய்ய இயவில்லை என்றால்.

பொருந்திவரும் காலப்-பகுதியில் COVID-19 தொற்று அதிகம் உள்ள பகுதி என்று பொதுநல அரசினால் அறிவிக்கப்பட்ட பகுதி ஒன்றிற்கு நீங்கள் சென்றிருந்து, நடமாட்டக் கட்டுப்பாட்டிற்கு உங்களை உள்ளாக்கிய இரண்டாவது பொது சுகாதார உத்தரவு ஒன்றிற்கு நீங்கள் ஆட்பட்டிருந்தாலும் நீங்கள் தகுதி பெறக்கூடும்.

பின் வரும் இரண்டு தருணங்கள் உங்களுக்குப் பொருந்தும் பொழுது, நோய்த்தொற்று அதிகம் உள்ளதாகப் பொதுநல-அரசினால் அறிவிக்கப்பட்ட பகுதி குறித்த தேவைப்பாடுகளை நீங்கள் இனி பூர்த்தி செய்யவேண்டிய தேவை இல்லை:

- உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் COVID-19 தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தினை அடையும் பொழுது
- உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் COVID-19 தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தினை அடையும் திகதியை உள்ளடக்கும் ஏற்புடைய காலப்பகுதி ஒன்றிற்கான உங்களுடைய COVID-19 Disaster Payment கோரல் ஒன்றிற்கு நாங்கள் அங்கீகாரம் அளித்திருக்கும் பொழுது.

உங்களுடைய வழமையான ஒரு முழு-நாள் வேலை என்பது உங்களுக்காக நேரம் குறித்து ஒதுக்கப்பட்ட, ஆனால் நடமாட்டக் கட்டுப்பாட்டு உத்தரவு ஒன்றின் காரணமாக உங்களால் செய்ய இயலாமல் போன வேலை நேரத்தைக் குறிக்கும். 8 மணித்தியாலங்களுக்கும் குறைவான முழு-நேர வேலை, பகுதி-நேர வேலை அல்லது 'கேஷுவல்' எனப்படும் அவ்வப்போது அழைக்கப்படும் வேலை ஆகியவற்றிற்கு நீங்கள் செல்ல இயலாமல் போன தருணங்களையும் இது உள்ளடக்கும்.

## Centrelink கொடுப்பனவு, அல்லது Department of Veterans' Affairs (DVA) கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவருகிறீர்கள் என்றால்

நீங்கள் பெறத் தகுதியுள்ள Centrelink கொடுப்பனவு அல்லது DVA கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவந்தால், அத்துடன் தகுதித் தேவைப்பாடுகள் அனைத்தையும் நீங்கள் பூர்த்தி செய்தாலும், COVID-19 Disaster Payment ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் கோரல் விடுக்கும் காலப்பகுதிக்கு முன்பான 8 வார காலத்தில் குறைந்த பட்சமாக ஒரு முறையாவது நீங்கள் உங்களுடைய வருமானத்தினை எமக்கு

அவசியம் அறிவித்திருக்க வேண்டும். நீங்கள் பார்வையற்றவராகவும், Age Pension அல்லது Disability Support Pension-ஐப் பெற்றுவருபவராகவும் இருந்தால் இந்த விதிமுறை உங்களுக்கு செல்லுபடியாகாது.

பின் வரும் ‘வருமான ஆதரவுதவித் தொகை’களில் ஒன்றை நீங்கள் அவசியம் பெற்றுவர வேண்டும்:

- Age Pension
- Austudy
- Carer Payment
- Disability Support Pension
- JobSeeker Payment
- Parenting Payment
- Special Benefit
- Farm Household Allowance
- Youth Allowance
- Widow Allowance
- Partner Allowance
- ABSTUDY Living Allowance
- Veterans’ Act -இன் கீழான Income support supplement
- Veterans’ Act -இன் கீழான Service pension
- Veterans’ Act -இன் கீழான Veteran payment
- Veterans’ Act -இன் கீழான Education Allowance.

உங்களுடைய வழமையான Centrelink அல்லது DVA கொடுப்பனவை நீங்கள் உங்களுடைய வழமையான திகதிகளில் பெறுவீர்கள். COVID-19 Disaster Payment-ஐ நீங்கள் Centrelink-இற்கு வருமானமாக அறிவிக்கவேண்டிய தேவையில்லை.

## Centrelink அல்லது DVA கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவராவிட்டால்

தகுதி பெறுவதற்கான அனைத்து விதிமுறைகளையும் நீங்கள் பூர்த்தி செய்தால், மற்றும் உங்களுக்குத் தகுதியுள்ள Centrelink கொடுப்பனவு ஒன்றை அல்லது DVA கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுவராவிட்டால், COVID-19 Disaster Payment-இற்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் கட்டாயமாக ஒரு ஆஸ்திரேலிய வாசியாக இருக்க வேண்டும், அல்லது ஆஸ்திரேலியாவில் வேலை செய்யும் உரிமையை உங்களுக்கு அளிக்கும் விசா

ஒன்றை வைத்திருப்பவராக இருக்கவேண்டும். ஆஸ்திரேலியாவில் வேலை செய்வதற்கான உங்களுடைய உரிமை உள்ளடங்க, உங்களுடைய விசாவைப் பற்றிய விபரங்களையும், நிபந்தனைகளையும் Department of Home Affair’s VEVO யினைப் பயன்படுத்தி நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

ஒரே ஒரு இடத்திற்கான COVID-19 Disaster Payment-இற்காக மட்டுமே உங்களால் கோரல் விடுக்க இயலும். ஒன்றிற்கும் மேற்பட்ட இடங்களுக்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்கள் என்று நீங்கள் நினைத்தால், உங்களுக்கு மிகச் சிறந்த இடம் எது என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

இடப் பகுதிகள், பொருந்திவரும் காலப்-பகுதிகள் மற்றும் கொடுப்பனவுத் தொகைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/covid19disasterpayment** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்

# உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்டவர்களுடைய எண்ணிக்கை 70 சதவீதம் அல்லது 80 சதவீதத்தினை எட்டினால்

உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் COVID-19 தடுப்பூசியின் இரண்டு மருந்தளவுகளைப் பெற்று தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்ட 16 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கை 70 சதவீதத்தினை எட்டும்பொழுது தானாக அளிக்கப்படும் COVID-19 Disaster Payment கொடுப்பனவுகள் நின்றுவிடும்.

நடமாட்டக் கட்டுப்பாடுகளின் காரணமாக நீங்கள் இப்போதும் பாதிப்பிற்கு ஆளாகிக்கொண்டிருந்தால், நீங்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான தகுதியோடுதான் இருக்கிறீர்கள் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள இயலும் வகையில் COVID-19 Disaster Payment கொடுப்பனவிற்காக நீங்கள் ஒவ்வொரு வாரமும் மீள்-விண்ணப்பம் செய்யவேண்டியிருக்கும்.

உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் COVID-19 தடுப்பூசி ஒன்றின் 2 மருந்தளவுகளுடன் தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்ட 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தினை எட்டும்பொழுது COVID-19 Disaster Payment கொடுப்பனவில் மாற்றங்கள் இருக்கும்.

உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் ‘கோவிட்-19’ தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தினை அடையும் திகதியை உள்ளடக்கும் ஏற்புடைய காலப்பகுதி ஒன்றிற்காக உங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தால் மட்டுமே COVID-19 Disaster Payment -இற்காக உங்களால் மீண்டும் விண்ணப்பிக்க இயலும்.

உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் ‘கோவிட்-19’ தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தினை

அடையும் திகதியை உள்ளடக்கும் ஏற்புடைய காலப்பகுதி ஒன்றிற்காக உங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தால் இன்னும் 2 வார காலம் வரைக்குமான COVID-19 Disaster Payment -இற்காக நீங்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

2 வாரங்கள் வரைக்குமான காலப்பகுதியில் COVID-19 Disaster Payment குறையும்.

ஒரு மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தினை எட்டும்பொழுது, முதல் வாரத்தில், COVID-19 Disaster Payment பின்வருவனவற்றில் ஒன்றாக இருக்கும்:

- 8 மணி நேரத்திற்கும் மேலான, அல்லது ஒரு முழு நாள் வேலையை நீங்கள் இழந்திருந்தால், மற்றும் நீங்கள் பெறுவதற்குத் தகுதியுள்ள Centrelink அல்லது Department of Veterans' Affairs (DVA) கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவராவிட்டால், $450
- 8 மணி நேரத்திற்கும் மேலான, அல்லது ஒரு முழு நாள் வேலையை நீங்கள் இழந்திருந்தால், மற்றும் நீங்கள் பெறுவதற்குத் தகுதியுள்ள Centrelink அல்லது DVA கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவந்தால், $100.

ஒரு மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் தடுப்பூசிகளை முழுமையாக இட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தினை எட்டும்பொழுது, இரண்டாவது வாரத்தில், COVID-19 Disaster Payment:

- 8 மணி நேரத்திற்கும் மேலான, அல்லது ஒரு முழு நாள் வேலையை நீங்கள் இழந்திருந்தால், மற்றும் நீங்கள் பெறுவதற்குத் தகுதியுள்ள Centrelink அல்லது DVA கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவரவில்லை என்றால், ஒரு முறை மட்டும் கொடுக்கப்படும் $320 ஆக இருக்கும்
- நீங்கள் பெறுவதற்குத் தகுதியுள்ள Centrelink அல்லது DVA கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவந்தால், இது நின்றுவிடும்.

இந்த காலப்பகுதிக்குப் பிறகு , நீங்கள் வசிக்கும் பகுதியில் COVID-19 Disaster Payments கிடைக்காது.

இன்னும் கூடுதலான தகவல்களுக்கு:

- ஆங்கிலத்திலுள்ள தகவல்களுக்கு servicesaustralia.gov.au/covid19disasterpayment எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- உங்கள் மொழியிலுள்ள தகவல்களை வாசிக்கவும், செவி மடுத்துக் கேட்கவும், அல்லது காணவும் servicesaustralia.gov.au/yourlanguage எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- உங்கள் மொழியில் எம்முடன் பேச **131 202** -ஐ அழையுங்கள்.

COVID-19 Disaster Payment -ஐப் பெற இனிமேல் உங்களுக்குத் தகுதி இல்லை என்றால், வேறெந்தக் கொடுப்பனவு அல்லது ஆதரவுதவிக்கு நீங்கள் தகுதிபெற

இயலுமாகலாம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.
servicesaustralia.gov.au/covid19 எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்

Centrelink கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றி உங்களுடைய மொழியில் எம்முடன் பேசுவதற்கு **131 202**-ஐ அழையுங்கள். கவனிக்கவும்: உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து ஆஸ்திரேலியா (Australia)-வில் இருக்கும் எவ்வொரு '13' இலக்கத்திற்கும் செய்யப்படும் அழைப்புகளுக்கு நிலைப்படுத்தப்பட்ட வீதம் ஒன்றின் பிரகாரம் கட்டணம் அறவிடப்படும். இந்த வீதமானது உள்ளூர் அழைப்பிற்கான விலையிலிருந்து வேறுபடலாம், அத்துடன் தொலைபேசிச் சேவை வழங்குநர்களுக்கு இடையேயும் இது மாறுபடலாம். உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து '1800' இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகள் இலவசமாகும். பொதுத் தொலைபேசிகள் மற்றும் கைப்-பேசிகளிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு நேரம் கணக்கிடப்பட்டு அதியுயர் வீதக் கட்டணம் ஒன்று அறவிடப்படலாம்.

பொறுப்புத்துறப்பு: 20 அக்டோபர் 2021 அன்றைய நிலவரப்படி இந்தத் தகவல்கள் துல்லியமானவை. கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளுக்கான ஒரு வழிகாட்டி என்ற நோக்கத்தில் மட்டுமே இந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களுடைய குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப, கொடுப்பனவு ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்கலாமா என்பதற்கான முடிவையும், விண்ணப்பம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முடிவையும் மேற்கொள்வது உங்களுடைய பொறுப்பாகும்.

Australian Government
Services Australia

# Information about the COVID-19 Disaster Payment

This is a lump-sum payment for eligible people who lost work and income due to a state or territory COVID-19 public health order. This may involve a lockdown, hotspot or movement restrictions.

The COVID-19 Disaster Payment is not taxable.

You may be able to get the COVID-19 Disaster Payment if you meet all the general eligibility rules as well as the rules for your situation. These are the general eligibility rules:

- you're 17 years or older
- you've lost at least 8 hours or a full day of work and income due a lockdown in your state or territory and don't have any appropriate pandemic-related leave entitlements
- you aren't getting Pandemic Leave Disaster Payment, a state or territory small business payment, Dad and Partner Pay, Parental Leave Pay, or a state or territory based pandemic payment for the same period
- you lived or worked in or visited a Commonwealth-declared COVID-19 hotspot that is subject to a restricted movement order
- you're not getting your usual income and your employer is not getting Retaining Domestic Airline Capability payments on your behalf.

You meet the requirement of living or working in a Commonwealth-declared COVID-19 hotspot if both of these apply:

- you live or work in an area which isn't locked down
- you can't work because you're unable to cross into or out of the lockdown area.

If you visited a Commonwealth declared COVID-19 hotspot during the relevant period and were subject to a second public health order that results in your restricted movement, you may also be eligible.

You no longer need to meet the Commonwealth-declared COVID-19 hotspot eligibility rule when both of these apply:

- your state or territory has reached 80% fully vaccinated with a COVID-19 vaccine
- we have granted your claim for COVID-19 Disaster Payment for a relevant period which includes the date your state or territory reaches 80% fully vaccinated for COVID-19.

A full day of your usual work is what you were scheduled to work but could not because of a restricted movement order. This includes not being able to attend a full time, part time or casual shift of less than 8 hours.

## If you're getting a Centrelink or Department of Veterans' Affairs (DVA) payment

If you're getting an eligible Centrelink or DVA payment and meet all the eligibility rules, you can apply for COVID-19 Disaster Payment.

You must have reported employment income to us at least once in the 8 weeks before your claiming period. This rule doesn't apply to you if you're blind and getting Age Pension or Disability Support Pension.

You must be getting one of the following income support payments:

- Age Pension
- Austudy
- Carer Payment
- Disability Support Pension
- JobSeeker Payment
- Parenting Payment
- Special Benefit
- Farm Household Allowance
- Youth Allowance
- Widow Allowance
- Partner Allowance
- ABSTUDY Living Allowance
- Income support supplement under the Veterans' Act
- Service pension under the Veterans' Act
- Veteran payment under the Veterans' Act
- Education Allowance under the Veterans' Act.

You'll get your regular Centrelink or DVA payment on your usual payment dates. You don't need to report the COVID-19 Disaster Payment as income to Centrelink.

## If you're not getting a Centrelink or DVA payment

If you meet all the eligibility rules and aren't getting an eligible Centrelink or DVA payment, you can apply for COVID-19 Disaster Payment.

You must be an Australian resident or hold a visa that gives you the right to work in Australia. You can check your visa details and conditions, including your right to work in Australia, using the Department of Home Affair's VEVO system.

You can claim the COVID-19 Disaster Payment for one location only. If you think you're eligible for more than one, you need to decide which is best for you.

For more information, including locations, payment amounts and relevant periods, go to **servicesaustralia.gov.au/covid19disasterpayment**

## If your state or territory reaches 70% or 80% full vaccination rates

Automatic COVID-19 Disaster Payments will stop when 70% of people aged 16 years and over in your state or territory are fully vaccinated with 2 doses of a COVID-19 vaccine.

If you are still affected by movement restrictions or lockdown, you will need to reapply for COVID-19 Disaster Payment each week so we know you remain eligible.

When 80% of people aged 16 years or older in your state or territory are fully vaccinated with 2 doses of a COVID-19 vaccine, there will be changes to COVID-19 Disaster Payment.

You can only reapply for COVID-19 Disaster Payment if you have been granted for a relevant period which includes the date your state or territory reaches 80% full vaccination.

If you have been granted COVID-19 Disaster Payment for a relevant period which includes the date your state or territory reaches 80% fully vaccinated, you can reapply for the payment for up to 2 more weeks.

The COVID-19 Disaster Payment will reduce over a period of up to 2 weeks.

The first week after a state or territory reaches 80% fully vaccinated, the COVID-19 Disaster Payment will be one payment of:

- $450 if you have lost more than 8 hours or a full day of work and you are not getting an eligible Centrelink or Department of Veterans' Affairs (DVA) payment
- $100 if you have lost more than 8 hours or a full day of work and you are getting an eligible Centrelink or DVA payment.

The second week after a state or territory reaches 80% fully vaccinated, COVID-19 Disaster Payment will:

- be one payment of $320 if you have lost more than 8 hours or a full day of work and you are not getting an eligible Centrelink or DVA payment
- end if you are getting an eligible Centrelink or DVA payment.

After this period, COVID-19 Disaster Payments will not be available in your area.

For more information:

- go to **servicesaustralia.gov.au/covid19disasterpayment** for information in English
- go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch information in your language
- call **131 202** to speak with us in your language.

If you are no longer eligible for COVID-19 Disaster Payment, you can find out what other payment or support you may be able to get. Go to **servicesaustralia.gov.au/covid19**

Call **131 202** to speak with us in your language about Centrelink payments and services. Note: calls from your home phone to '13' numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to '1800' numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

Disclaimer: This information is accurate as at 20 October 2021. The information contained in this publication is intended only as a guide to payments and services. It's your responsibility to decide if

you wish to apply for a payment and to make an application, with regard to your particular circumstances.